காதலரைத் தேடுகிறாள்



# கன்னி

- உமா

Published by: AAA Ventures (pvt) Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ 12823

# கண்ணி

## காதலரைத் தேடுகிறாள்

– உமா

Published by: AAA Ventures (pvt) Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற் தலைப்பு | : | கன்னி |
| நூலாசிரியர் | : | அ. உமாகரன் |
| பதிப்புரிமை | : | நூலாசிரியருக்கே |
| பதிப்பாண்டு | : | 2012 |
| பக்கங்கள் | : | 121 |
| விலை | : | 200/= |
| நூல் வடிவமைப்பு | : | சி. துஷிகரன் |
| அச்சிடல் | : | மதிகலர்ஸ் பிறிண்டர்ஸ்<br>நல்லூர்<br>021 2229285 |
| வெளியீடு | : | AAA Ventures Pvt.Ltd |

| | | |
|---|---|---|
| Title | : | Kanni |
| Author | : | A. Umakaran |
| Edition | : | 2012 |
| Price | : | 200/= |
| Book Designing | : | S. Thusikaran |
| Printed by | : | Mathi Colors<br>Murugesar lane.<br>Nallur<br>021 2229285 |
| Published by | : | AAA Ventures Pvt. Ltd<br>46, Temple Road, Jaffna |


இ
894-8(11)
உமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

ஒரு சிறுவன் தமிழ்ஆழியில் சொற்கள் கிள்ளிக் கவிதை என்று கொண்டுவந்தான். அதை நிறைகுடமாக்கி இன்று உங்கள் கைகளில் தந்துள்ளேன். இவனின் குழந்தைக்கவிகள் இன்று கன்னியாகிவிட்டது. இவள் கர்ப்பமாகி இன்னும் நூறு கன்னிகள் உதயமாகும். சோறூட்டி வளர்த்த பிள்ளை இல்லை. இவன் சொற்கள் உண்டு வளர்ந்த பிள்ளை. கட்டுக்கடங்காத கற்பனைகள், அனுபவித்த உண்மைகள், ஆழமான சிந்தனைகள் இவன் யார் என்பதை அடையாளம் சொல்கிறது. "இந்துவின் மைந்தன் இவன்" ஒரு பள்ளிமாணவன் கன்னி கண்டு கண்ணிமைத்தல் ஐதார்த்தம். இவன் ஒரு கன்னியையே உருவாக்கிவிட்டான் இது சரித்திரம். யாழ்ப்பாணத்து இலக்கியம் புது வடிவம் பெறவில்லை. இதில் புதியதொரு இலக்கியமே உருவாகி இருக்கிறது. என் கண்முன் வளரும் பிள்ளை இவன். காலங்களைக் கடப்பான். வெற்றிச்சிகரம் தனில் பாதம் பதிப்பான். ஒருதாய்க்கரு உதிக்கவில்லை. ஆனால் ஓராயிரம் தாய்மார்க்குச் சமனான இந்துவின் வழி வந்தோம். ஆதலினால் இவனும் என் சோதரனாகிறான்.

வாழ்க உன் தமிழ்ப்புலம் சோதரா

திரு. க. செவ்வேள்
தலைவர்
UR Friend Foundation
AAA Ventures Pvt. Ltd.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசானின் ஆசிச்செய்தி

இணுவிலில் உதித்தவன்
இந்துவின் மைந்தன்
வயதில் இளையவன்
அறிவில் முதிர்ந்தவன்
என் அரவணைப்பில் வளர்ந்தவன்
இதயத்தில் நீங்காதிருப்பவன்
நல்லவன் நற்றிறம் மிக்கவன்
தலைமைத்துவம் அவனுக்கு தனித்திறன்
பேச்சில் பெருந்தகை
கவிதையில் ஒரு பெட்டகம்
அவன் வேறு யாருமல்ல
அருள்பரன் உமாகரன்
ஆயிரத்தில் ஒருவன்
அன்பின் பிறப்பிடம்
பண்பின் உறைவிடம்
அழகின் திருவுருவம்
கன்னி எனும் பெயரில்
ஏட்டில் கவிதை பயக்கிறான்
தொகுப்பில் உள்ளவை நூறு
அத்தனையும் முத்துக்கள்
தமிழ் அன்னையின் சொத்துக்கள்
நாட்டில் முத்தமிழ் முதல்வனாய்
மூன்று முறை தேசிய விருது பெற்றாய்
கலைமகளைப் பலர் தேடுகின்றார்
கலைமகளே உனைத் தேடி வந்தாள்

உன் உள்ளம் எனக்குத் தெரியும்
உணர்வுகளும் எனக்குப் புரியும்
காலம் ஒரு நாள் மாறும்
கவலை வேண்டாம் மகனே
உயிர் அழியலாம்
உணர்வுகள் ஒருபோதும் அழியாது
உன் கன்னி பலரின் காதலியாக
என் பலகோடி ஆசிகள்.

உன் அன்பு ஆசான்
வா.சிவராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இறைவனுக்கு நன்றி – என்னை மனிதனாகப் படைத்ததற்கு அல்ல, தமிழனாகப் படைத்ததற்கு.

93, கார்த்திகை ஒன்று, இரண்டு சிறுவர்களின் காதலில் உதித்திட்ட தமிழ்வம்பன் நான். என் அன்னையின் கைகளில்ச் சொத்தென்று எதுவும் இல்லை எனக்கென்று தந்துவிட அதனால் அவள், தமிழ் என்ற சொர்க்கத்தையே பாலோடு ஊட்டிவிட்டாள் பாருங்களேன். என் தந்தை, தோளில் என்னைச் சுமந்த நேரம் போக மீத நேரம் சுமந்த "மூட்டைகள்" என் பேனாவின் கவிதைவியர்வைக்குக் காரணம் தோழர்களே.

தாத்தா சொன்ன இராமாயணம், மகாபாரதம் என்னை தமிழ்வெறி கொள்ளச்செய்ய, பாட்டியின் அலம்பல்க் கதைகளுக்குள் ஒழிந்திருந்த அரசியலக்கதைகள் என்னைச்சிந்திக்க வைத்தன.

2வயதில் ஓட்டம், முட்க்கம்பிவேலிகள; குண்டுச்சத்தங்கள், கீதையும் திரிபிடகமும் இரக்கமின்றிக் கிழிக்கப்பட்டன.

தில்லைமணி ரீச்சரிடம் ஆரம்பக்கல்வி, கொப்பிவாங்கக் காசில்லை மண்ணில் எழுதிப்படிப்பு"இ" எழுதப்பட்ட பாடு "உமா" ரீச்சரின் ஊக்குவிப்பு "ர" க்கும் "ற" க்கும் வித்தியாசம் தெரியாத எனக்குச் சொல்வளம் தந்த தங்கமணிரீச்சர்.

மனிதனாக்கிய அறநெறிப்பள்ளி, முதல்த்தேசியவிருது வாங்கக் காரணமான வியஜரட்ணம் கல்லூரி, எல்லாம் எனக்கு வெற்றியைக்காட்டிய இறைவன்கள்

அடுத்தடுத்து 3 தேசிய விருதுகள் 25 க்கும் மேற்பட்ட விருதுகள் என்று என்னைத் தமிழனாய்ப் பெற்றவள் "யாழ் இந்து அன்னை", என் ஆத்மாவின் பிறப்புக்கள் எத்தனையோ அத்தனைக்கும் அவளை மறவேன்.

பொண்மணிரீச்சர், நவநீதகிருஸ்ணன், ஞானதேசிகன், ரகுபதி, சிவராசா, நிசாந்தன் என இத்தனை தெய்வங்கள் என்னை ஆளாக்கியது அண்ணா துவாவின் அருட்டலில்த் தான் எனக்கே விளங்கியது.

என்னுயிர்த்தோழி, என் இனியநண்பர்கள் என்னுடைய இரசிகர்களாக, "உங்கள் நண்பன்"சமூகம் என்னைக் கவிஞன் என அறிமுகம் செய்தது உலகிற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எழுதுவது கவிதைதானா? என்று நானே அஞ்சிநிற்கையில் "சிறு பிள்ளைக்கவிஞன்" என்று என்னை வரவேற்ற ஊடகங்களுக்கு ஆயிரமாய் நன்றிகள்.

மறக்கவில்லை; நான் பட்ட அவமானங்கள், நான் விழுந்தபொழுதுகள், என்னை கேலிசெய்த வாய்கள், கல்லெறிந்த கைகள் என் நெஞ்சைவிட்டு அகலவில்லை. ஆனால் ஒரு மாபெரும்உண்மை, அவர்கள் இல்லையேல் நான் இவ்விடத்தில் இல்லை.

18வருடம் தானே; இதுவரை தோற்கவில்லை, ஆனால் என்னுடைய கவிப்பயணம் கலையிழந்து போகுமோ என அஞ்சி, நான் நடுங்கிக்கிடந்தவேளை, எனக்குக் கைகொடுத்த "செவ்வேளை" ஐயனை என்றும் மறவேன்.

இங்குள்ள கவிதைகள் கற்பனைகள் மட்டுமல்ல.

கற்பனை கடந்த அனுபவங்கள், உண்மைகள்.

வாழ்கையின் ஒவ்வொரு முக்கியமான நிமிடங்கள்.

"என் பேனாவின் மை, உங்களின் வாழ்த்துக்கள் தானே"

எனக்கு இரசிகர்கள் உருவாவதை நான் விரும்பவில்லை. என்னோடு, தமிழ் வளர்க்க இளம்கலைஞர்கள் உருவாவதையே விரும்புகின்றேன்.

அ.உமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுடைய நியாயம்

ஆப்கான் எல்லையில் துப்பாக்கி
ஏந்தி நிற்க்கும்
தாலிபான் நான்
இஸ்லாமியப் பெண்களே
உங்கள் முகத்திரைகளை
நீங்கள் களைந்தபோது - தான்
நாங்கள் முகம் மறைத்து
ஜிகாத்துக்குத் தயாரானோம்.

எனக்குத் தெரியும் தோழர்களே
நீங்கள் குர்-ஆனை மறக்கவில்லை
ஆனால்ப் பறிகொடுக்கப் பார்த்தீர்கள்
நாளைய தலைமுறைக்கு
நல்லது சொல்ல அது வேண்டாமா?

எண்ணெய் வாங்கவந்தவர்கள்
எம்மை வாங்கிப்போவதா?
தண்டனை நாம் அவர்களுக்கு
வழங்கிப் பிரயோசனம் இல்லை
பறிகொடுப்பவன் இருந்தால்த் தானே?
பறிப்பவனுக்குத் தொழில் நடக்கும்
அதனால்த்தான் உங்களை
தண்டிக்கிறோம்.

தோழர்களே உங்களின்
ஆதங்கம் புரிகிறது
மெக்கா மீது ஒரு துளி குருதி
விழுகிறது என்று - எங்கள்மீது
கோவப்படுகிறீர்களே
நாங்கள் ஓய்ந்துவிட்டால்
மெக்காவையே களவாடும்
கூட்டம் எழுந்துவிடும்
என்ன செய்வீர்கள்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு ஆசை இல்லையா?
ஈச்சமரத்துச் சோலைகள் நடுவே
ஆடிப்பாட,
அந்த நாளுக்காய்த்தான்
காத்திருக்கிறோம்.
ஜிகாத்துக்குப் பலன் கிடைக்கும் என்று
அன்று நாம் நோன்பிருக்கும்போது
நிச்சயமாகத் தோட்டாக்களை
உண்ணாமல்த்
துப்பாக்கிகளும் விரதம் இருக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படிக்கு இராவணன்

காவியமானவளே
கம்பன் கண்ட பத்தினியே
ஈழமே எரியூட்டி
வானரங்கள் அணைகட்டி - என்
பத்து தலைகள் ஒடித்து
அயோத்தி மன்னனவன்
மீட்டெடுத்த காரிகையே

காதலுக்காய் இராமனவன்
உனைமீட்டு போய் இருந்தால்
கண்டவன் சொற்கேட்டு
கற்பிணித் தாய் உன்னை
காரிருள் நடுவே
கானகத்தே விட்டிருப்பானா?

காட்டிடை நடுவிலும்
நீ காதலுடன் சொல்லியிருப்பாய்
இராமஜெயம்
இது இந்த அரக்கனுக்கே தெரியும்
உன் அரன் மறந்தானோ?

தாயினும் இனியாளே சீதா
நீ பத்தினி என்பதை
நிரூபிக்க ஏன்
தீயுள் இறங்கினாய்?

உன் இராமன்
ஏன் இராவணனானான்?
என் சாம்பல் அழுதது
கம்பன் கண்பட்டு
நீ காவியமானாய்
உனக்கு நேர்ந்ததை
உலகம் அறிந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆனால் எத்தனையோ சீதாக்கள்
சந்தேகத்தின் வஞ்சனையில்
இன்னமும்..............
உன் கதையில்
ஈரமான என் சாம்பல்
உலரும் நாள் எப்போதோ?
இராமர்களே மீண்டும் தீ மூட்டுங்கள்
கற்பை பரிசீலிக்க இல்லை
உங்கள் சந்தேக புத்தியை
எரிக்க.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலை

விடுதலை என்பது
உலக வழக்கத்தில் இருந்து
விடுதலையாகி விட்டது
அடிமைப்படுத்தப்பட்ட இனங்கள்
விடுதலையைக் கேட்பதில்லை
ஏன் என்றால்
கேட்ட மறுகணமே – விடுதலை
கிடைத்து விடுகிறது
அடிமைத்தனத்தில் இருந்தல்ல
உடலில் இருந்து உயிருக்கு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியாசம்


"டை" கட்டி
உலக நாடுகளிடம்
நாம் செய்வதை
திருவோடேந்தி
தெருவோரமாய் நின்று
ஒருவன் செய்கின்றான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தம்

உள்ளங்கள் பரிமாற்றப்படும்
உதட்டுவழிசேவை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயமான கேள்வி

தாய்மை உயிரோடு
இருக்கிறது என்றால்
குழந்தைகள் ஏன்
குப்பைத் தொட்டிகளில்
தவழ்கின்றன?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலையணையைக் கேள்


என் தலையணை சொல்லும்
நான் கொண்ட
காதலின் ஆழத்தை
நீ என்று நான் நினைக்க
எத்தனை இரவுகள்
அது நனைந்திருக்கும்
என் முத்தங்களால்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனிதம்


காதல் புனிதமானது
புனிதமானவர்களுக்குமட்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகு

மோனாலிசாவை அழகு என்கிறார்கள்
என்காதலியை நேரில்ப் பார்க்காதவர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மை

வல்லரசுகளின் முன்னர்கூட
தலைகுனியாத ஹிட்லர்
தலை குனிந்தபடி இருந்தான்
ஒரு சவரத்தொழிலாளி முன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல் வாழ

ஒரு தண்டவாளம் நீ
மற்றையது நான்
நம்மேல் ஓடும் ரெயில்தான்
காதல்
யோசித்துப்பார்
துண்டவாளங்கள் இணைந்தால்?
ஓடும் ரெயில் கவிழ்ந்துவிடும்
நாமிருவர் இணைந்தால்
வாழும் காதல் குலைந்துவிடும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களே

சுதந்திரம் என்ற சொல்லுக்கு
விடுதலை அளித்து
அகதி என்ற ஆரம்பச் சொல்லுடன்
உருவாகி இருக்கும்
புதிய அகராதியை
என்ன செய்யப் போகிறீர்கள்?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலமை

ஒரே ஒரு குபேரன் பொம்மையை
வாங்குங்கள்
கோடி கோடியாய்ப்பணம் குவியும்
என்று
ஆயிரம் குபேரன் பொம்மைகளைக்
கூவிக்கூவி விற்கிறான்
ஒருநேர உணவிற்காய்த் தள்ளாடும்
நடைபாதை வியாபாரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதங்கம்

இறந்தவை எல்லாம்
மீண்டும் பிறக்குமாம்
இதில் எனக்கு உடன்பாடு இல்லை.
ஏன் என்றால்
ஆதாம் ஏவாளுடன்
இறந்து போன உண்மைக்காதல்
இன்றுவரை மீண்டும் பிறக்கவில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதையாகிறாய்

பெண்ணே உன்னைப் பார்த்த
அந்தக் கணத்தில்
என் கண்களைப் பறித்துக் கொண்டாய்
வார்த்தைகளை ஊமையாக்கினாய்
கைகளுக்கு உயிர் கொடுத்தாய்
உன்னால் நான் கவிஞனாகிறேன்
என்னால் நீ கவிதையாகிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு தாசியின் கேள்வி


தினம் என் இளமையின் பந்தியில்
பத்துப் பேராவது உண்பார்கள்
என் அப்பாவின் வயதுக்காரர்கள்
சில அண்ணாக்கள்
ஏன் தம்பிகளும் கூட
ஆனால் வருபவர் எல்லோரும்
பொதுவாய்க் கூறுவது
"உன்னிடம் சொல்வதற்கென்ன
என் மனைவியின் நடத்தை
அவ்வளவாய்ச் சரி இல்லை" என்று
நீங்களே சொல்லுங்கள்
இந்த ஏகபத்தினி விரதர்களை
என்ன செய்யலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காதலுக்குக் கண்கள் இல்லை"
என்றகாலம் போய்
"காதலிக்க நல்ல பெண்கள் இல்லை"
என்றாகிவிட்டது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுளுக்கு ஒருகடிதம்

என்னவளின் கூந்தல் குழப்பிய
காற்றைக் கைதுசெய்
இல்லையேல் கலவரம் நடக்கும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் யார்?

பெண்களுக்கு காதல்
புனிதமானது
பெண்வடிவில்த் திரியும் பேய்களுக்கு
அது விளையாட்டு
ஆண்களுக்கு காதல்
உயிரிலும் மேல்
அரக்கர்களுக்கு அது
பொழுதுபோக்கு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணற்றது

மீள் குடியேற்றம்
சொந்த இடங்களுக்கு மீண்டும்
போகிறோம்.
சோகங்களில் இருந்து மீண்டுபோகிறோமா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதானா காரணம் (விகடம்)

L·12823

அந்தர வான ஓடையில்
காகித வெண்ணிலா ஓடத்தில்
வெண்ணிலவின் வெண்ணிலவே-நீ
தென்றல்த் தூண்டில் போட்டு
விண்மீன் பிடிக்கிறாய்
விண்மீன் பாரத்தில் சற்றுக் குனிந்தே
பலம் காட்டி இழுக்கிறாய்
மாராப்பு விலகுதடிபெண்ணே
நிலவு பதறுதடி
தென்றலுக்கும் வியர்க்குதடி
சுற்றும் பூமிக்கே தலைசுற்றிப்போனதடி
விண்மீன்கள் உன் தூண்டிலில்
போட்டி போட்டு விழுந்ததடி
தாவும் கடலலைகள் காமக்கெடு கொண்டு
உன் ஸ்பரிச மார்புதீண்ட
நிலவுக்கே பாய்ந்ததடி
உண்மையைச் சொல்
"சுனாமிக்கு நீதானே காரணம்?"






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு வேறா?

கவசங்கள் அணிந்து
தற்காப்பு கருவிகளுடன்
செல்லும் வெடிபொருள் அகற்றும்
அதிகாரி
வெறும் சங்கிலியால்
இணைத்தபடி நாய் ஒன்றைக்
கூட்டிச்செல்கிறான்
உயிரென்றால் நாய்க்குவேறு?
மனிதனுக்கு வேறா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உச்சகட்டம்


எனக்குப்பட்டமளிப்பு விழா
அம்மா,அப்பா சகோதரம்
அத்தனை உறவுகளும் என்னருகில்
பலத்த கைதட்டல்கள்
அந்த ஆண்டுக்கான
முதன்மை மாணவன் விருதை
வாங்க மேடை ஏறும்வேளை
வாத்தியார் முதுகில் தட்டிச்
சொன்னார்
"தம்பி எழும்பு பரீட்சை முடிந்துவிட்டது"
என்று




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேனா

வார்த்தைகளை வாழவைக்கத்
தன் உதிரம் சிந்தி
வடிவம் கொடுக்கும்
புதுமையான தியாகி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவு

உன்னை நாயகனாக்கி
உன்னுடைய விழித்திரையில்
நீ மட்டும் இரசிக்கும் மாயப்படம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வு

"அதிகரித்து வரும் பால்மா விலையில்
அவலப்படுகுது குழந்தைகள்"
என்றால்,
அமைச்சர் ஒருவர் தீர்வு சொன்னார்
"குழந்தைகள் யாவருக்கும்
இலவசக் கைசூப்பல்க் கற்கை
நெறியாம்".




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மையில் என்ன நடந்தது?

இரட்டைக் கோபுரத்தின் உள்ளே
இரட்டை கோபுரங்கள்
நானும் அவளும்
புலரத்துடித்த அந்தக் காலைப்பொழுது
போசணை அற்ற பெண்ணின்
மாதவிடாய் காலத்துப்
படுக்கை போல்ச் சிவந்திருந்த வானம்.
அன்னையின் அருட்டல் தாங்காமல்ப்
புரண்டு புரண்டு சினுங்கும்
பள்ளி சொல்லும் சிறுவன்போல
உதிக்கப் பஞ்சிப்பட்டான் சூரியன்

ஒற்றைக் குழாயில் இரட்டைக் குழியல்
ஒரு கறுப்பு நயாகரா
என் கண்முன்னே கழுவப்பட்டது
அவள் கூந்தலைச் சொன்னேன்.

மதம் பாராமல் மணம் கொண்டதால்
அந்த ஒற்றை அறையில்
அவள் பைபிளின் போதனைகளுடன்
நான் குர்ஆன் சொல்லியபடி
தொழுகையில்.

ஒற்றை தேனீர்க் கோப்பையில்
இரட்டைதாகம் தணித்தோம்
முத்த"வெல்லங்களைக்கடித்து
தாவி ஏறினால் முதுகில்
பச்சைக் குழந்தைபோல
செல்லமாய்ச் செவிகடித்தாள்,
மெல்லமாய்,
நடந்து சென்று ஜன்னல் ஓரம்
நின்றபடி......................


அண்ணலே வான் பாருங்கள்
வெண்ணிறப் புறா என்றாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கள்ளி பொய்யா சொல்கிறாய்
"அமெரிக்கதேசத்தின்
கனவுச் சின்னமது" என்றபடி
எழுந்தேன்............

நான் சொன்னது தான் உண்மை
அது புறா இல்லை
அப்படி என்றால்
அது பறவையே இல்லை.
ஆம் அது குர்ஆனிலும் பைபிளிலும்
சொல்லப்பட்ட சாத்தான்
யோசிக்க நாழிகை இல்லை
கோரமாய்த்தகர்த்தார்கள்.

கோபுரங்கள் எரிந்ததை மட்டும்தான்
உலகமே பார்த்தது
அந்த அறையில்
மரணவாசலில்
நாங்கள் பார்த்தது எல்லாம்.
"அன்பைப் போதித்த
குர்ஆனும் பைபிளும் எரிந்ததைத்தான்"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலங்களைத் திருடிவிட்டாய்

மூத்தபையனுக்கு ஐம்பது வயதுதான் ஆகிறது
ஆனாலும் நேற்றுத்தான் எங்களுக்கு
திருமணம் நடந்தது போல் இருக்கிறது.
அடி கள்ளி காலங்களையும் திருடிவிட்டாய்
காதலால்
இன்றும்தான் எனக்குச் சலிக்கவில்லை
உன்முகம் பார்க்க
குறை என்று உன்னிடம் என்ன இருக்கிறது?
முத்துப்போன்ற பற்கள் தான் இல்லை
முத்தாரச்சிரிப்பு இருக்கிறதே
மணம் மாறவில்லை
கூந்தல் நிறம்தானே போனது.
மைதீட்டும் புருவமதை
முதுமை கொண்டுபோக
பெண்மை காட்டும் ஜாலங்கள்
விழியோரம் குறையவில்லை.

இன்றும் நீசமைக்கும்வேளை
பின்னால் வந்து செல்லமாய்
உன் இடுப்பைக்கிள்ளத்தான் ஆசை
பாவம் நான்
கை நடுக்கத்தில் அடுப்பைக்கிள்ளினால்.......
இரத்தம் காலவதியாகியும்
உன் முத்தம் கலைவடிக்கிறது.
என்புகள் தளர்ந்தால் என்ன?
உன் அன்புதான் உறுதியாய் இருக்கிறதே
அதுபோதும்.

ஒருவருக்கு ஒருவர் ஆதாரமாய்
இன்றுவரை
ஒரே பாதையில்த்தானே பயணித்தோம்
கைத்தடி சாட்சி சொல்லும்
நாம் இதுவரை தன்னைப் பிடிக்கவில்லை
என்று......
உணர்வுகளில் சேர்ந்திருந்தோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளமதில்ச் சேர்ந்திருந்தோம்
சிரிப்பிலும், அழுகையிலும் சேர்ந்திருந்தோம்
படுக்கையில் சேர்ந்திருந்தோம்
ஜமன் அவன் ஜீவன் எடுக்கையிலும்
அப்படி ஒரு வரம் வேண்டும்
வா பிரார்த்தனையில்ச் சேர்ந்திருப்போம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் நடிகை

அவள் நடிகை
பாவம் கஸ்டப்படுகிறாள்..............
பள்ளி செல்லும் வயதில்ப்
படுக்கையில்க் காட்சி
எதற்காக இந்தப் போராட்டம்?
பாவம் எந்த நடிகை
வேதனைகளுடன் போராடவில்லை?
நடித்துக் காட்டிச் சாதிக்கத்தான்
அவளுக்கும் விருப்பம்
ஆனால்
காட்டி நடிப்பதை இரசிக்கும் கூட்டத்திடம்
கலைகள் போய்ச் சேருமா?



L.12823



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரிகளே....

அடை மழை
நனைந்து நனையாத வெள்ளை ஆடைகள்
அணிந்து
பிராதான வீதிக்கு வந்தேன்
பாடசாலை 10 கிலோ மீற்றர் தொலைவில்

எங்கள் வீதியமைப்பு அதிகாரிகளை
மனமாற வாழ்த்துகிறேன்
மழை நீர் சேகரிக்க
ஆயிரமாயிரம் தொட்டிகளோடு
வீதிகளை அமைத்ததற்கு

என் இரதம் புறப்பட்டது
முதலாம் குழியில் ஏறி இறங்க
வெள்ளை ஆடைக்கு என்ன கண்ணூறோ
அப்படியே மண்ணிறமானது
கேவலப்பட்டேன்

காலையில் கிளம்பும் போது
கைப்பணமாக 10 ருபாய்க்குற்றி எடுத்து
மேற்பையில் போட்டு வந்தேன்
இரண்டாம் குழியில்
அது தானாய்த் தாவியது வெளியில்

மூன்றாம் குழியில்ப் பலத்த அடி
பின் சில்லின் காற்று சிட்டாய்ப் பறந்தது
காற்றடிக்க வேண்டும்.
கண்படும் தூரத்தில் சைக்கிள்க் கடை
காற்றை நிரப்பினேன்.....
கடைக்காரன் ஒரு ரூபாய் ஊதியம் கேட்டான்
பையைத் தடவுகிறேன்
பாருங்கள் தோழர்களே
பத்துரூபாய்க்குச் சொந்தக்காரனாய் வந்தவன்
ஒற்றை ரூபாய்க்குக் கடன் காரனாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மட்டுமல்ல
அதிகாரிகளே
பத்து வளம் உள்ள ஒருநாடு
ஒற்றை வளத்துக்காய்க் கையேந்தக் காரணம்
உங்கள்
அக்கறையீனம் தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் போகிறேன்...

நான் உங்களுடன்
வாழ்ந்த வீடு
எனது அறுபது வயதிலும்
இன்றும் - நான்
வெட்கமடையும்
சமாச்சாரம் நடந்த
அந்த அறை
எங்களின் திருமணப் புகைப்படம்
தொங்கிய அந்தச் சுவர்
மூத்த மகன் சுகமாய்
நித்திரை கொள்ள
எனது சேலையுடன் நீங்கள்
ஏணை கட்ட ஏறிய அந்த வளை
உங்களுக்குச் சிராய் குத்தி
இரத்தம் வந்ததே
நான் கூடத் தேம்பித் தேம்பி
அழுதனே....
அதே வளை
நீங்கள் மரவள்ளி பிடிங்கி
வரும் தோட்ட வெளி
உங்கள் அம்மா
மீன்காரனுடன் பேரம்பேசிச்
சண்டைபிடிக்கும் முச்சந்தி
அவன் கூட பொல்லாத கிளவி என்பானே
அதே முச்சந்தி
உங்கள் அப்பா குந்தி இருந்து
பாக்கிடிக்கும் அந்தத்திண்ணை
சின்னமகள் பூக்கொண்டு போகும்
கோயில்.
உங்கள் அக்கா மகன்
அவளை ஒழிந்து நின்று கேலி செய்யும்
அந்தப் பள்ளிக்கூட மதில்
இத்தனையும் பார்க்க
நான் அநாதையாய்ப் போகின்றேன்
என் சொந்தவூருக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூஜைக்குப் போகேனோ? (முதிர்கன்னி)

தந்தைக்கு நான் தண்டம்
தாய்க்கு நான் பாரம்
கன்னித் தன்மை அடைபட்ட சிறை
ஆசைகள் சடலமாகிய கல்லறை
கண்ணாடியோடு மட்டும் காதல்க் கதை பேசியவள்
கனவிலும் மணவறை காணாதவள்
ஆடவர் பார்த்தொதுக்கும் விலைப்படாதா
பண்டமிவள்

ஆம்
எத்தனை சுயம்வரங்களைக் கண்டு
களைத்து விட்டது என்வீட்டு வரவேற்பறை
என் மணக்கோலத்தை எத்தனைமுறை
விழுங்கியது
செவ்வாயும் சனியும் சீதனமும்

சீதனம் போதாது என்றால்
எத்தனை நொண்டிச் சாட்டுகள்
மூக்கு அழகில்லை என்பான்
தலையில் முடி இல்லாதவன்
நிறம் போதாது என்பான்
வாக்குக் கண்ணன்
குரல்சரியில்லை என்பான்
ஒரு திக்குவாயன்
திருமணம் வேண்டாம் என்றாள் ஒரு கவலை
குறை கூறி வேண்டாம் என்றால்......
பன்னீரால் நனைக்கவேண்டிய படுக்கைகளை
எத்தனைமுறை கண்ணீரால் நனைய வைத்தீர்கள்

'இனி உன் சுயம்வரத்தில்
இளவரசர்கள் எவரும் இரார்
ஆடிக்களைத்த இராஜாக்கள் தான்
பாழாய்ப் போனாய்
பாவமடி நீ..." என்று
வெள்ளிக்கம்பி எனத் தலைமுடிகள் இரண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேலி செய்யுது என்னைக்
காதோரமாய் நின்று
செய்யாதா பின்னே?
நான் பதினெட்டில் மலர்ந்து
இன்றோடு 20 தைப்பொங்கல்கள்
கடந்து விட்டேன் .......


இறுதிவரை நான்
பூஜைக்குப் போகேனோ?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி

நம்
தாலி ஏற்று
தன் குடும்பம் விட்டு வருகிறாள்
நம் இச்சையில்
தன் நாணம் விட்டுத் தருகிறாள்
தன் உயிரை உருக்கி
எம் தலைமுறை படைக்கிறாள்
நம் அழுகையிலும் சிரிப்பிலும்
அவள் கண்ணாடி ஆகிறாள்
முன்னாடி நாம் போகில்
தாலியோடு தன் இன்பம் சகலமும் துறக்கிறாள்
முன்னொரு கால்
உயிரும் துறந்தாள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியாசமான பெண்

கைப்பிடிக்கக் காதலியாகும்
பெண்கள் இங்கு பலகோடி
'ஆம்ஸ்ரோங்' கால்பதிக்கக்
காதலியானாய் - நீ
நிலா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நூற்றாண்டுக்கு ஒரு இராமாயணம்

இன்றுவரை அந்த இராமன்
அன்னையுடன் தான் இருந்தான்
திடீரென பஸ்சுக்குள் சுயம்வரம்
சூர்ப்பனகை இராமனுக்கத் தாரமானாள்

இராமனுக்குத் தம்பி இராவணன்
அண்ணியார் மீது ஆசைகொள்கிறான்
சூர்ப்பனகை மாதவி ஆகிறாள்

இராமனும் மாயமானின் அழகு மயக்கத்தில்
உலகம் மறக்கிறான்
நியாயத்தை தட்டிக்கேட்க முடியாமல்
தசரதன் திருதராட்டினன் ஆகிறான்

சூர்ப்பனகை வாய்மொழி அம்பாகிறது
நல்ல இதயங்களைத்தேடி தைக்கிறது
இங்கு கூனி பாவம் இராமனுக்குப்
புத்தி சொல்லப்போய்
மீண்டும் வில்லுண்டையால் அடிபட்டாள்

பாவம் கைகேயி தன்மகன் சொற்கேட்டு
வீடுவாசல் துறக்கிறாள்
"முதியோர் இல்லம்" விளைகிறாள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் சாகலாம்

வாழத்தான் காதலிச்சம்
என்ன செய்யச் சிறுக்கி
கோரமாய்ச் "சாதிவெறி"க்குச் சமாதியாகப்போறம்.

ஊரவிட்டு ஓடத்தான்
எங்களுக்கும் ஆசை
ஆனால் சாதிவெறிக்குப் பயந்தோடி
போற இடத்தில
மதவெறி இனவெறி எண்டு பலியானால்
பூனைவால விட்டுப் புலிவால் பிடிச்ச கதையாப்போம்.


கிணத்தில விழுவம் எண்டால்
நான் விழ உன்சாதியும்
நீ விழ என்சாதியும்
வெறி கொண்டு வெருண்டு
கிணத்தையே ஒதுக்கிப்போடும்
பாவம் அந்தக்கிணறு
நம்மால் ஏன் அநாதையாவான்?

தண்டவாளத்தில்த் தலைவைக்கலாம்
அதில் ஒண்டும் சிக்கல் இல்லை
ஆனா ரெயில் வந்து சேர
இன்னும் பத்து வருஷம் ஆகும்போல
ரோட்டில படுத்தம்
வாகனம் ஏறும் எண்டு
RDA புண்ணியத்தில
போற வாற வாகனம் எல்லாம்
பாய்ஞ்சு பாய்ஞ்சு போகுது
எங்களைத்தாண்டி.

தூக்குப் போடலாம் எண்டால்
மரமும் இல்லை
மரம் வெட்டி மழையும் இல்ல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிக்கிற "போஸ்ட் மரங்களில"
நாம் தொங்கக் கிளையும் இல்ல
வித்தியாசமான தற்கொலைதான்
ஒண்டும் செய்ய ஏலாது
"வா சந்தியில் நிண்டு அரசியல் கதைப்பம்"
சத்தியமாய்ச் செத்திடலாம்....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# T–Shirt

ஸ்............ஸ்........எண்டால்
வழமையாத் திரும்பிறவள்
இண்டைக்கு ஏன் திரும்பேல்ல?

பின்ன நான்
Phone பண்ணிப் பாத்தன்
கையில போன் வச்சிருக்கிறாள்
ஆனால் Off எண்டு சொல்லுதே

முகம் கூடக் காட்டாமல்
திரும்பி நிண்டபடியே கோயில் கும்பிடுறாள்
ஒரு வேளை
நான் School போகாம நிண்டு
தண்ணி அடிச்ச கதை தெரிஞ்சிருக்குமோ
ஆனால் இந்த சின்னவிசயத்துக்கு
அவள் கோவிக்க மாட்டாளே

வெளியில நிக்கிறது
அவள் ஓடுற Chooty தானே.....
சரி வழமையான சிக்னலைக்
கொடுக்க வேண்டியது தான்
மெல்லமா மூன்று முறை
விசிலடிச்சன்
ம்ம்ம... அவ
அதுக்கும் திரும்பேல்ல

கோயிலில இப்படிச் செய்யிறது பாவம் தான்
புத்திக்குத் தெரியும்
வயசு தான் கேக்குது இல்ல
இண்டைக்கும் பாருங்கோ
அவளின்ர 'டைட் - ஸ்கேர்ட்டும்'
'ரீ — சேர்ட்டும்'
என்னமோ செய்யுது என்னை
இனி வேற வழி இல்ல
ஒருத்தரும் இல்லத் தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைசாப் போய்த் தட்டிப்பாப்பம்
பூனைபோல் அடிவைச்சு
மெல்லமெல்லக் கிட்டப்போனன்
சட்டென்று திரும்பினாள்
(என்ர ஐய்யோ......)
மாமி....................
T — Shirt செய்த கோலத்தில
கிழடு எல்லாம் குமராப் போச்சு
குமரெல்லாம் நாசமாப் போச்சு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பம்மா

அரைச்சுக் காய்ச்சின மீன் குழம்பு
மாங்காய் போட்டு மசிச்சு வச்ச மரவள்ளிக்கறி
வெள்ளமாவில புட்டு
வாயூறுது அப்பம்மா
உன் கைப்பக்குவத்தை நினைக்க

சீரகப்பேணிக்குள்ள இனிப்பை ஒழிச்சுவச்சு
பள்ளிக்கூடம் விட்டு நான் வர
நைசாத்தருவாய்
யாருக்கும் தெரியாமல்
ஏன் எண்டால்
அம்மா கண்டா ஏசுவா
பூச்சி பிடிக்கும் எண்டு

நான் கோயிலுக்கு வெளிக்கிட்டு
கதவு மூலையில் நிண்டு இரண்டு விரலைக்காட்ட
நீ முந்தானையில் முடிஞ்சு வச்ச
இரண்டு ரூவாகாசைக் கனிவோட தருவாய்
பின்னேரம் மழை பெய்யும் - தூசண மழை
அதுவும் அப்பப்பரின் வாயால
பேசாரா பின்னே
அவர் கள்ளுக்கு வைச்ச காசைக்
களவா நீ எனக்குத் தந்தால்

நிலவு வெளிச்சத்தில
மணல் பூத்த முத்தத்தில
வேம்புக்கு கீழ
பிலாவில கோதி
மீன் தலைக் கூழ்குடிக்க
மூக்கால் எனக்கு வடியும்
கையால சீறி எறிவாள்
என்னுடைய அப்பம்மா

அவள் அழகைச் சொல்லாமல்க்
கவிதையை முடிச்சாக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறை எண்டு ஆகிடும் - அவளுக்கில்ல
கவிதைக்கு

சொன்னா என்ன?
சிலநேரம் அப்பப்பரின் நரை மீசை
கறுப்பா மாறி மறையும்
ஏன்எண்டால் - அப்பம்மா
தள்ளாடும் வயதிலையும் - தமிழ்ப்பண்பாடு மறக்கேல்ல
தலைகோதிப் பூமுடிப்பா - சேலைகட்டிக் கோயில்போவா
பொக்கைவாய்க் கிளவி
சிரிக்கையிலும் அழகுதான்

கேட்டதெல்லாம் தந்தாய்
கடைசியாய் ஒருவரம்
கட்டாயம் தரவேணும் - எனக்கு
உன்போல அன்பான பெண்
தாரம் எண்டு அமைகையில
அவ வயிற்றில் எனக்காக
மீண்டும் நீ வர வேணும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## அபலையின் கண்ணீர்

காலையிழந்த சிற்பமிவள்
உறவிழந்த பறவையிவள்
சுமை தாங்கும் பேதையிவள்
கரைசேரா ஓடமிவள்

இமை மூட முடியாது
இருள் தன்னை விரும்பாமல்
கனவதனை வெறுத்து நிதம்
இமைக் கதவை மூடுகிறாள்

கருவிழியில் கார்மேகம்
இளம் மனதில்ப் போராட்டம்
கண்ணீரைச் சுமந்தவளாய்
கானல் நீர் வாழ்வானாள்

விடிவிளக்கு ஒளிர்ந்தாலும்
ஒளி இழந்த கண்களிது
அபலை என்று அச்சிட்ட
அரங்கேறாக் காட்சி இது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவரில்லாச் சித்திரங்கள்

வறுமையெனும் வனமதிலே
நறுமலராய் நீ அலர்ந்து
மறு நொடியில்
மௌனத்தால் சிறகொடிந்து போகின்றாய்

பொறுமையில்லா மானிடரா
உனைப்பறித்தார்
சொல்லாத ஊமையாய்
நீ உதிர்ந்து போகின்றாய்

வெறுமனே நீ வரைந்த
மறுவாழ்வு ஓவியங்கள்
வண்ணம் கொண்டு அலங்கரிக்காச்
சிவரில்லாச் சித்திரங்கள்

பார்த்துவிட்டுப்ச் சிலர் செல்லப்
பரிகசித்துப் பலர் செல்ல
படும் துயரை யாரறிவார்
பகட்டான பூமியிலே






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்கெட்டபின்பு

உன் இதழ்ச் சிரிப்பினிலே
முட்களைத் தெரியவில்லை
மோகன ரோஜாவே
யார் செய்த பாவமிது?

வண்டினமாய் நானிருந்தால்க்
கொண்ட உன் வேசம் அதை
கொய்யாமல் நானறிவேன்
மெய்யதனை உணர்ந்திருப்பேன்

குணம் தெரிந்து பலனென்ன
குருதியைக் குடித்த பின்னே
மனம் தெளிந்து நலனுமில்லை
கண்போன பின்பு வணக்கமில்லை
நிஜத்தைப் பொய்யென்று – உன்
நிழலை மெய் என்று
இளைப்பாறும் வேளை – உன்
முள் கிழிக்க விழித்தேன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை உன் தோழியோடு

தொலைந்து உன் இரு விழியிலா - இல்லை
இதய வழியிலா?
விழுந்தது புருவ வளைவிலா — உன்
இதயக்குழியிலா?
கலைந்தது உன் கண்மணியிலா?
வாய் மொழியிலா?

இழந்ததை மீட்டிடாச்
சக்தி இல்லா மின்விளக்கு
இணையத்தை இணைத்துவைக்கும்
கம்பியில்லாத் தந்தி இது
கண்ணுக்குத் தெரிவதெல்லாம்
கையிலே கிடைக்காது

பார்த்ததும் பறித்து விட்டாய்
நினைவிலே ஜெயித்து விட்டாய்
கனவிலே நீ தோன்றினாலும்
கணப் பொழுதே மறைகின்றாய்
நிஜப் பொழுது நிஜமா என்ன?
நாளை உன் தோழியோடு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது நியாயமா?

முள்ளுக்குள் மலர்ந்த போது
ரோஜா என்றாய்
கல்லுக்குள் உயிர்கொடுத்துக்
கடவுள் என்றாய்
நீர் தீர்ந்து போன பின்னும்
குளம் என்றாய்
குணம் மறைந்து போன பின்னும்
மனிதன் என்றாய்
இலை உதிர்ந்து போன பின்னும்
மரமென்றாய்

உடலில் ஒரு உறுப்பு இழந்துவிட்டால்
ஏன் 'ஊனம்" என்கிறாய்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படகோட்டி

கோரமாய்க் கோடி உயிர்குடித்த
கடலலையிடம்
“துடுப்புகளால்”
நியாயத்தைத் தட்டிக்கேட்பவன்
நான் மட்டும் தான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபலை

நினைவுகள் மீட்டுகையில்க்
குருதியில் ஓட்டமில்லை
இதயத்தில் துடிப்பில்லை
வேதனையைச் சுமந்தவளாய்
விழிநீரில் நீந்துகிறாள்

அபலையாய் வாழ்வதற்கா
அரிதான பிறப்பெடுத்தாய்
பாரமதை சுமப்பதற்கா
பாரினிலே நீ மலர்ந்தாய்

சுமை தாங்க முடியாத கோழை நீ
இமை மூடமுடியாத பேதை நீ
கனவை வெறுக்கும் காரிகை நீ
உறவைத் தேடும் பறவை நீ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்மை கொல்வது

வரன் வேண்டி வரம் கேட்க – வரன்
தட்சணை அல்லவா கேட்கிறான்
கரம்பிடிக்கக் காசா?
மரத்துப் போனதிவன் மனதா?

வேண்டாம் இந்த வரம்
நீண்டநாள்ப் பயணம் இது
கரங்களில் வீணை இல்லை
சுரங்களில் ஓசை இல்லை

கடலோரக் காலடிகள்
காற்றுக்கு அஞ்சி நின்று
வேடிக்கை பார்க்கிறது
இவள் சோக நாடகத்தை

கலைந்தது அவள் கூந்தல்
தொலைந்தது உயிர்மூச்சு
விலைபேசும் நிலை வேண்டாம்
பெண்ணே
இவையாவும் இழந்தது
பணம் எனும் கருணை கடலாலே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைமாறும் இதயம்

மலர் விட்டு மலர் தாவும்
வண்டினத்தின் வம்சமா - இல்லை
மரம் விட்டு மரம் தாவும் மந்தி இனமா?
நிறம் விட்டு நிறம் மாறும்
பச்சோந்திக் கூட்டமா?
எது என்று நான் சொல்ல
உன் நிலைமாறும் இதயத்தை

கண்ணிமையில் விழுந்தேன் என்றாய்
காரிகையே நீதான் என்றாய்
சொல்லாலே தீட்டும் ஓவியம்
சொற்பவேளை தான்
கல்லிலே பொறிப்பதையாவது — நிஜமாக்கு
கல்லறைப் பேய்களிடம்
தப்பி ஓட முடியாது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாயவலை

என் வாழ்க்கையின் வசந்தம் என்றாய்
உன் பேச்சு மழலை என்றாய்
விழி அசைவில்த் தொலைந்தேன் என்றாய்
தூக்கம் தனை இழந்தேன் என்றாய்
சுவர்க்கமே நீதான் என்றாய்
ஏக்கத்தால் நலிந்தேன் என்றாய்

தொலைந்தது என் இதயம்
பிரிவு தான் பெற்ற இலாபம்
இழந்தது என் இதய வானம்
கலைந்தது இனிய இராகம்

சூரியனாய் உதித்த போது
மறைவாய் என்பதை மறந்தபேதை நானே...
மறைந்து போனாய் இருளாய்...
கால் தடக்கி விழுந்ததும் நானே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கயும் வட்டி இருக்கு...

எனக்குத் தெரியும்
வட்டி வட்டி எண்டு நீ
எத்தனை பேர் தாலி அறுத்திருப்பாய்
பணம் மேல்க் கிடந்தவனே
புணமாய்ப் போய்க்
கிடக்கிறாய்
அதுவும் தன்னந்தனியாய்

மனிசிக்குப் பிரசவவலி
ஆஸ்பத்திரி போகணும்
பத்துரூபாய் கடன் கேட்டால்
அதுக்கு பத்து சத வட்டிபோட்டு
பிறந்த என் குழந்தைக்குத்
தொப்புள்க் கொடி காயமுன்னம்
வட்டிகேட்டு வந்து தொட்டிலத் தூக்கியவனே

கோயில் மணியகாரன் நீ
உண்டியல்க் கணக்கெங்க?
ஊரில நாயும் தேடா பணக்காரன் நீ
சேர்த்து வச்ச சொந்தமெங்க

யாரும் உனக்கில்ல
சரி பணமாச்சும் கூடவருதா?
அதும் வரவில்லை
பின்ன
ஏனெடா அதச் சேர்த்தாய்
மனுசரச் சேர்க்காம....


உன் நெத்தியில இருக்கிற
ஒத்தரூபா நாணயத்தையும்
சத்தியமா தொடமாட்டன்
பிறகு பேயாக நீ வந்து
கேட்டாலும் கேப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுக்கும் வட்டி

புணம் திண்ணும் காக்கைபோல்
பணம் திண்ட அரக்கா
நீ ஜமலோகம் போடா
செய்த பாவத்துக்கு வட்டி
தருவார்கள்
பக்குவமாய் வாங்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னென்று எனை படைத்தாய்?

இறைவா பெண்என்றா என்னைப் படைத்தாய்?
என்னென்று எனைப் படைத்தாய்
கண்ணிருந்தும் குருடாகி
காவியமும் படைக்கவில்லை
நின்அடி நான் பணிந்து
நின் புகழ்தனைப் பாடி
நித்தமும் புலம்புகின்றேன்
இல்லை தெரியாமலத்தான் கேட்கிறேன்
பெண் என்று ஏன் எனைப் படைத்தாய்

சுற்றமும் நான் வேண்டேன்
என்குற்றமும் நான் விளம்பேன்
உன் முற்றமே தஞ்சம் என
யார் முற்றமும் நான் செல்லேன்
என் பிணிக்கு நீ மருந்து
மருந்துக்கு மாறாத என்விதி எழுத்து
இறைவா என்னென்று எனைப்படைத்தாய்?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யார் தெய்வம்?

கருவறையை வெறுத்தேன்
என்னை அதில்ச் சுமந்ததால்
பருவத்தை வெறுத்தேன்
அதை நான் அனுபவிக்காததால்
வாழ்க்கையை வெறுத்தேன்
துன்பத்தில் துவண்டதால்

வானமேநிலவை வெறுக்குமா?
நிழலைப்பூமி ஒதுக்குமா?
உறவை உயிர்தான் மறுக்குமா?
மாயமே! சோகமே! மானிடமே
இதை வெல்லுவோர் யாவரும்
தெய்வமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமை விலங்கு

வறுமையெனும் வனவிலங்கின்
சிறகொடிந்த பறவையாய் நீ
வறுமையிலும் செம்மையாய்ப்
பொறுமையில்ப் பூமியாய்
வாழ்ந்தபல இலட்சியங்கள்

கல்வி தனைக் கரைசேர்க்கக்
காசென்ற ஓடமில்லை
காசு வந்த பின்னாலோ
கற்பதற்கு நேரமில்லை

காற்றுள்ளபோதே தூற்றென்றால்
காசென்ற இராட்சதன் ஏன் பிறந்தான்?
வறுமைஎனும் விலங்கினை
வலிந்து பூட்டிடவா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லாத ஊமைதான்

உன்கண்களில்த் தெரிகிறது
கனாக்களாய் நீவாழ்ந்த காலம்
உன் இமைகளில்ப்புரிகிறது
சிறகடித்துப் பறந்த நேரம்
உன் கண்மணியில்த் தெரிகிறது
கார்மேகம் சூழ்ந்த கோலம்
உன் புருவ வளைவுகள்
போராட்டப் பாதைகள்
இமைகளால் மறைப்பது
உன் இனிய நிலாக்காலத்தை
பெண் என்பதால் இத்தனை சோகமா?
நாங்களே இதன் காரணமா?
சொல்லாத ஊமை தான்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்ந்தது

மாடிகள் பல தோன்றி
குடிசைகள் மறைந்தன
மின்கம்பங்கள் பலதோன்றி
குப்பிவிளக்குகள் அணைந்தன
விஞ்ஞான வேகத்தால்
எத்தனையோ சோகங்கள்
இன்னும் இருளிலே

கோடிகள் கொடுத்திடுவார்
பாடிடும் புகழுக்காக
வாடிடும் சிசுமுகத்தை
அணைத்திட யாரும் இல்லை

பெருமைகள் சேர்ப்பதற்குப்
பெரிதாகக் கொடுத்திடுவார்
பேப்பரில் வரும் என்று
பெருஉவகை கொண்டிடுவர்
பேருக்குப்பணம் கெடுத்து
பெருமைக்குக் காத்திருந்து
சிறுமையாய் வளர்ந்திடுவர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது வாழ்வு?

பூவாக நீ மலர்ந்து புன்னகைத்தாய்
பிஞ்சாகும் பொழுது உன்னை யார் பறித்தார்?
கனியாகும் போது உன்னை யார் வெறுத்தார்?
தாயாரோ நீ அறியாய்.

உன்கனவு தான் என்ன?
உன் வாழ்க்கை தான் என்ன?
கண் திறந்த நேரம் தான் என்ன?
விண் முகில்க் கூட்டம் தான் என்ன?

கண்களில் நீர் சொரிய
கண்ணே நீ செய்த பாவம் என்ன?
யாராரோ தாலாட்டுப் பாட
நீ தூங்க முடியாமல் வாட

சதிகாரக் கூட்டத்தின் நடுவே
நீ பரிதாபம் ஆகித்தான் போனாய்
அறியாத உன் இளமனதில்
அணையாத தீபம் தான் வாழ்வு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைந்து செல்வது எதற்காக?

விதி எனும் நூலிலே
நீ வரைந்த கோலம்
மதி எனும் ஊற்றின்றி
நான் வாடும் கோலம்
கருமுகில் சூழ்ந்ததுபோல்
என் இனிய காலம்
கலைவதும் சேர்வதும்
காலம் காட்டும் கோலம்
நிலவை மறைத்தது நீ தானே...
நிலவைத் தொட்டதும் நீ தானே...
கனவினில் நிழலாக நீவந்ததும்
காணும் நேரம் கலைகின்றாய்
கலைந்து செல்வது எதற்காக
காத்திருக்க வைப்பதற்க்கா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொற்காலம் மீட்க

இப்ப நான் கிளவி
குமராக இருக்கையில்
கொண்டாடித் திரிஞ்ச இடமெல்லாம்
பார்க்க நான்
லண்டனால வரப்போரன்
பலபேரை மண்டாடி

நீயும் நானும்
மரத்தடியில் செங்கல் மூன்று வச்சு
மண்ணில சோறாக்கி
திண்டகதை மீட்டுப்பார்க்க
தள்ளாடும் உடலோடும்
தளராத உணர்வோடும்
வாரேண்டி தோழி

முகத்துக்கு 'பவுடர்' இல்ல
கோயில் வாசலில
கும்பிடுற சாக்கில- சிரட்டைப்பேணிக்குள்ள
கிடக்கிற திருநீற்றைத்
திருடிப்பூசுவமே.....
அந்தக்கதை திரும்பிமீட்க
வாரேண்டி தோழி

பொட்டு வாங்கக் காசில்லை
பொட்டை வைக்காமல்விட மனசில்லை
கரிச்சட்டிய கவிட்டு
எண்ணெய்க் கையால்த் தொட்டு
பொட்டெல்லாம் வச்சமே...
அந்தப்பொக்கிஷ நாட்களைப்
பூவாய்ப் பொறுக்கிச் சேர்த்து
நட்புக்கு மாலையிட
வாரேண்டி தோழி

செல் அடிச்ச வேளையில
அரை இறாத்தல் பாண்வாங்க




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரை நாளாச் சங்கக் கடையில்
அறுவறுத்து நிக்கையிலும்
அழகான கதைகள் பல
இயற்றிச் சொன்ன உன் வாய்க்கு
இனிப்புகள் கொண்டு வாரன்
ஆனால்
ஒரு சதம் காசுக்கு வாங்கித்திண்ட

பனங்கட்டி இனிப்புக்கு
நிகரில்லைத் தோழி
பல நூறு டாலருக்கு வாங்கின இனிப்பு

இப்படித் தான் வாழ்க்கையும்
ஆயிரம் வந்தாலும் சுவைஇல்லத்தோழி
சொந்த ஊரில்
உன்னோடு வாழ்ந்த அந்த நாட்களைப்போல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவளுக்கு அசு தான் பெயர்

செல்லம் குட்டி அன்பே
என்று ஆசையாய் அழைத்தவள்
காசைப்பார்த்து
வெளிர்நிறத்தில் கொச்சைத் தமிழ் பேசி
கொஞ்சி பேசும்
வெளிநாட்டு மாப்பிள்ளை மீது
இச்சைகொண்டு
காதல் மறந்து உன்னையும் கைவிட்டுப்
பிரிந்துபோனால்
சந்தோசப்படு உன்னைவிட்டுப்போனது
பெண்ணல்ல
தாசி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் சாட்சி
# (ஒரு பள்ளிக்கூடவாயிலின் வாக்குமூலம்)

பிள்ளையைச்சேர்க்க,
கனமான பையோடும்,
கலங்கின மனசோடும்
காவல் நிக்கிற பெற்றோர்கள்

அப்பா நான் போகமாட்டன்
எண்டு வீறிட்டுக் கத்திக்
கலவரம் செய்த மழலைகள்
08:10க்குப் பிந்தி வந்து
அதிபரிட்ட அடிவாங்கின பையன்கள்
இதெல்லாம் பார்த்துப்
பரிதாபப்பட்டுக் கொண்டு
08:15க்கு நேரம் தவறாமல் வரும்
சில சேர் மார்

இவை எல்லாத்துக்கும் மேலாக
என்ர மதில் என்கிற தோளில
கையூண்டி உன்னிப் பாய்ந்து
09.00 மணிக்கு உள்ளபோகும்
சில பொடியன்கள்


பத்து நாட்கள் பள்ளிவராமல்ப்
பம்மாத்து விட்டு
தானே கடிதம் எழுதிக்
கையோப்பம் போட்டு
கச்சிதமாத்தப்பிப் பிழைச்ச
வாண்டுப் பயல்கள்

எத்தனை ரகமாய்
எத்தனை பேர்கள்
அத்தனை பேரும்
எல்லாம் முடிஞ்சு பெரியாளாகி
டாக்டர்,வக்கீல்,ரீச்சர் எண்டு
வெளியேறினாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதும் மழலையாக அழுவார்கள்
"அம்மா நான் எப்படி போவன் உன்னை விட்டு"
எண்டு

வந்த ரகம் எல்லாம்
எந்த ரகமாய்ப்போனதோ இல்லையோ
மனுசராய்ப் போனதுக்கு நான் சாட்சி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தத் திட்டம் மாறக்கூடாது



இண்டைக்கும்,
கிடைக்குமோ? கிடைக்காதோ?
கடைசியாக முந்தநாள்த்தான்
தொட்டனான்
வெள்ளிக்கிழமை
சனி ஞாயிறு எண்டால்ப் பொதுவாய்ப்
பள்ளிக்கூடப்பிள்ளைகளுக்குக் கொண்டாட்டம்
ஆனால் என் போன்றவர்களுக்கு
சாத்தியமாக் கவலை

இரண்டு நாளே
ஏன்னால பொறுக்க முடியேல்ல
உந்த முனிவர்களும், தவசிகளும்
எப்படித்தான் இருக்கிறார்களோ?
திரும்பவும் திங்கட்கிழமைதான்
பாக்கலாம் எண்டு நினைக்கிறன்

அதுவும் சிலநேரம் தான் நல்லா இருக்கும்
பார்க்கவே ஆசையாக இருக்கும்.
எல்லோரும் தூக்க ஓடிப்போனாலும்
முதலில தூக்கிறது நான்தான்
அதுக்காக சிலநேரம்
அடிபட்டதும் உண்டு

அப்பதான் தெரியும் எனக்கு
நான் மட்டும் அல்ல
பலபேர் பள்ளிக்கூடம் வாரதுக்கு
இதுவும் ஒரு காரணம் எண்டு

அதனால
ஆண்டவனுக்கு நேத்திவைக்கிறன்
"அரசாங்கம் மாறினாலும்
அந்தத் திட்டம் மட்டும்
மாறக்கூடாது"
இந்த மதிய உணவும் இல்லாட்டில்
எங்களில பலபேர்
எப்பவோ மடிஞ்சிருப்பம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயவிளக்கு...

இலையுதிர்காலத்தில்
பாடும் நீ வசந்தகாலக் குயிலா?
கலைந்த கார்முகில்க் கூட்டத்தில்
வெண்பஞ்சு முகிலா?
கலையிழந்த ஓவியத்தில்
உயிர்கொடுத்த தூரிகையா?
வாசமில்லா மலரிலே
வீசும் நறுமணக் காற்றா?
ஓசையில்லா வீணையிலே
இசைகொடுத்த நாயகனா?
யார் என்று சொல்ல
ஆசையாய் அழைக்கின்றாய்
அன்பிற்குப் பணிகின்றாய்
துன்பத்தைத் துடைக்கின்றாய்
இன்பத்தை அளிக்கின்றாய்
உன்சோகம் நானறியேன்
என்சோகம் நீ அறிவாய்.
இப்படி எதுவும் நினைக்கவில்லை
எப்படி இறைவன் நினைத்துவிட்டான்
இப்படித்தான் வாழ்வென்றா,
இதய விளக்கைத் தூண்டிவிட்டான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவிதி வசம்



சொல்லாத சோகமெல்லாம்
இதயம் எனும்பெட்டகத்தில்
இடமின்றி அடைத்துவைத்து
விளம்பிடவும் யாரும் இன்றி
புலம்பியே அழுது நின்றேன்
பார்த்தும் பார்க்காமல்ப்
பலமுறை விலகிச்சென்றாய்
ஈர்த்தது என்னவென்று
நீயறியாய்,
நானும்தான்

வியர்த்து
மேனி பதைபதைத்து
வாடியே வதங்கி நின்றேன்.
பன்னிரண்டு போகும்மட்டும்
கண்ணிரண்டும் தூங்காது
பெண்ணினத்தின் தலைஎழுத்து
இப்படித்தான் இருக்குமோ?
யாருக்கும் சொல்லாமல்
ஊர் குழம்பிப்போகாமல்,
சேற்றுக்குள் வாழ்ந்துவிட்டேன்.

வருடங்கள் பல கழிந்தும்
வசந்தங்கள் வீசவில்லை
சொந்தங்கள் பல இருந்தும்
சோதனையில் வெல்லவில்லை
உன் சொல் மழையிலே
உயிர்மூச்சை நிறுத்திவைத்துச்
சோகத்தைச் சுமையாக்கிச்
சுகமாய்த் தொலைந்துவிட்டேன்

கறை இல்லா உன் இதயம்
இறைவனால் கொடுத்தவரம்
இதழழகைப் பார்த்துநின்றேன்
மழலையாய் நீதெரிந்தாய்
முதலில்ச் சும்மா என்றாய்
முடிவில்....???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவள் (ஒரு வர்ணனை)

உலகின் மிகச்சிறிய நீர்வீழ்ச்சி
அவளின் ஒருமுழக் கூந்தல்

மூன்றாம் பிறை நெற்றியில் விழும்
செவ்வாய்க் கிரகத்தின் விம்பம்
அவளின் சிகப்புப் பொட்டு

வெண்ணிற வானத்தின்
கருநிற நிலாக்கள்
அவளின் கண்மணிகள்

நுரையீரல்த் தீவுக்கு
யாத்திரை செல்லும்
காற்றின் நுழைவாயில்
அவளின் மூக்கு

கரையாத பனிக்கட்டிப்பற்களின்
களஞ்சியம்
அவளின் நளின வாய்

அவள் வாய்வழி வரும் தமிழைக்
கௌரவம் செய்ய
பிரம்மனே தைத்த செங்கம்பளம்
அவளின் நாக்கு

என் முத்தங்கள் தூங்கும்
மெத்தைகள்
அவள் கன்னம்

வார்த்தைகளின் பொற்சுரங்கம்
அவள் கழுத்து

பொன்னிற மூங்கில் அவள்
செங்கைகள்
பத்துக்கட்டை ஹார்மோனியம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் விரல்கள்
பிரம்மனின் கிறுக்கல்ச் சித்திரம்
அவள் ரேகை
பஞ்சடைத்த விகாரைகள்
அவள் மார்பு

ஒருதுளைப் புல்லாங்குழல்
அவள் வயிறு
குழை நிறைதாங்க வாழைபோல்
உடை எடை தாங்கா இடை

இதன் கீழும் வர்ணிக்க
வார்த்தைக்குப் பஞ்சமில்லை
வர்ணிப்பதும் தவறில்லை
ஆனால் சிலர் என்னை வைவார்
மேலே தூக்கி வையார்

ஒரு வரியில் சொன்னாள்
அவள்
இளமையின் மர்மங்கள்
புதைந்து கிடக்கும்
"ஒரு நடமாடும் டாவின்ஸிக்கோர்ட்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பு

எக்காலப் பெண்களும் காத்திராத
தற்காலப் பெண்களால் மறுக்கப்படுகின்ற
இலக்கியங்கள் மட்டும் சொன்ன
சர்ச்சைக்குரிய பொக்கிஷம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரிதானே நான் சொல்லுறது

மாதை நம்பும் மடையனும் மரமும்
வாழும் விதத்தை ஒன்றென்க
வானே தொடினும் மரம்தன்
வேரே அதற்கு விலங்கென்க
அதுபோல் புகழின் உச்சியில்
போயினும் அவனுக்கு
மாதின் விழியே குழியென்க.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ஆயுதம்

தமிழ் என்கையில்ப் பூவாய் இல்லை
நாவில்ப் புயலாய் இருக்கிறது.
வேல்கொண்டு கொய்யும் தலைகளைச்
சொல்கொண்டு வீழ்த்துவேன்,
ஏன் எனில் உண்மையைச் சொல்லும்போது
பேனாவும் ஆயுதம்தான்
இதில் வெறி என்று ஏதும் இல்லை
வெற்றியின் வழி தேடுகையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தநாள்

எனக்குத் தொல்லை இராது
முற்றிலும் நிம்மதி
அமைதியான உறக்கம்

என் எதிரிகள் மகிழும்நாள்
என் நண்பர்கள் கதறும்நாள்
என் அம்மாவுக்கு "ஏச" ஆள் கிடைக்காது
அப்பாவின் கண்டிப்புகள் மௌனமாகும்

என் ஆயுதம்
நான் கடைசியாய்க் கிறுக்கிய
கொப்பிக்குள் ஓய்வெடுக்கும்

கடன் தந்தவன் தலையில் அடிப்பான்
கடன் வாங்கியவன் அழுது நடிப்பான்

என் காதலிக்கு
காண்பார்கள் எல்லோரும் ஆறுதல் சொல்வார்கள்
உண்மையாக
ஆறுதல் சொல்லவேண்டியநான்
மௌனமாகக் கிடப்பேன்.

அவளின் சுகதுக்கங்களோடு
ஒன்றியிருந்த நான்
அவளுக்குத் துரோகம் செய்வேன்
அவளின் இந்தத்துக்கத்தில்ப் பங்கேற்காமல்.

அன்று நான்
பலரைப் "பெத்த ராசா" ஆவேன்
இருக்கும்போது தேடாத உறவுகள் எல்லாம்
எதுக்காகவோ வரும்
இருக்கும்போது தூற்றினதுகள் எல்லாம்
அண்டைக்குப் பாராட்டும்.

பூமுடிப்போர் எல்லாம் வாசல்வரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெட்டியானுக்கு புழைப்பு நடக்க
என்னையே கொடுத்ததால்.

எனது கடைசிப்பட்டமளிப்பு விழா
காலனால் நடாத்தப்படும்
என் கவிதைகளுடன் வாழ்வேன்
"அமரன்" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திரமாவதா?

குடிக்கக்
கூழும் இன்றி
குடியுரிமையும் இன்றித்
தள்ளாடும் தோழா
உன் உள்ளாடும் கனவுகள்
நனவாவது எப்போது?
வரும் வரும் என்றால்
வராது தோழா
பறித்துக்கொள், உனக்கு வேண்டியதை

எத்தனை தலைமுறைகளை
உரமாக்கி விட்டாய்
தேயிலைச் செடிகளுக்கு
உண்மையைச் சொன்னால் என்ன
தேனீர்க் கோப்பைகளில்
இரத்தவாடை அடிக்கிறது
கண்டவரையும் குற்றம் சொல்வதில்
எனக்குடன்பாடு இல்லை
குளிருக்கு நடுங்கினாய், நியாயம்.
ஆனால்வெள்ளையனையும்,கொள்ளையனையும்
கண்டு நடுங்குவது
எந்தவிதத்தில் நியாயம்

பத்துரூபாய் சம்பளத்துக்குப் பலியானாய்
பள்ளிகள் கண்டிராய்
சொந்தமாய்க் கோவணமும் மிச்சமில்லை
அட்டைகளும் ஆளும்வர்க்கமும்
உன் குருதியை உறுஞ்ச
நீ சகித்துக் கொண்டாய்
உடமைகள் இழந்ததோழா
உரிமைகள் மீட்க்க வா.
"உன் வறுமைகள்
ஏடுகளில் இலக்கியமாகலாம்
பொறுத்தேன்
அவையே உங்கள் சரித்திரமாவதா?
மறுத்தேன்"
என்று, பனங்காட்டில்
உன்னை எண்ணி எண்ணி ஏங்குகிறது
தன்னைப்பற்றி ஒருநாளும்
சிந்திக்காத கிளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் பூ அல்ல முள்

அவள் அழகாய் இல்லை என்று
நீங்கள் சொல்லித்தான் எனக்குத்தெரியும்

அவள் சேறு தான்
குணம் செந்தாமரை
விழியில் கயல் இல்லை
மொழியில் காதல் இருக்கிறது
உடல் கருங்கல் தான்
உள்ளம் விக்கிரகம்

நூறுபேர் கண்டுஆசைகொள்ளும்
தங்கக்குடமில்லை-அவள்
ஆயிரம்பேர் உயிர்காக்கும்
கிணற்று வாளி

அழகைப்பார்த்துத்தான்
காதல் வரும் என்றால்
உலகில் பாதிப்போருக்கு
கன்னி கழிந்திராது.

காசுக்கு காரியமாக்கும் தாசி என்றால்
நீங்கள்சொல்வது நியாயம்
அழகைப் பார்க்கத்தான் வேண்டும்
இவள் என் காலங்களை வசந்தமாக்கும்
காரிகையடா
அழகைவிட அன்புதான் முக்கியம்.

ஒருநாள் எல்லோர் தசையும் சுருங்கும்
நீங்கள் சொன்ன அன்பில்லாத அழகிகளின்
நரம்பில் இராகம் இராது
ஆனால் அன்றைக்கும்
என்காதலியிடம் நான் இரசித்த
அன்பென்ற அழகு சுருங்காது
அவளின் மொழி என்ற இராகத்தில்
இனிமைகுறையாது

நான் முள்ளையே பிடித்தாலும்
முழுசாய்ப் பிடிக்கிறேன் - விட்டுவிடுங்கள்
ஏன்என்றால் பூ அரிதில் வாடும்
முள்...............
பூவிலும் நெடுநாள் வாழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரெயில் பயணம்

பள்ளி எனும் பாதைதேடி
கால்போன இடமெல்லாம் ஓடி
சொல்லிடவும் முடியாத சோகத்தில்மூழ்கி
கல்லிலே கால்தடக்கி
தள்ளியே விழுந்த பலர்

பட்டம் ஒன்று பெற்று பறக்கவிட ஆசை
நூல்வாங்க நூலளவும் காசில்லா வாழ்க்கை
பட்டினியால் அவர் தூங்க
படித்ததெல்லாம் மறந்துவிட
பரீட்சைக்குச் சென்ற பின்பு
பத்தும் பறந்துவிடும்

இப்படியும் வாழ்வா? என்று
எப்படியோ கலங்கி நின்று
தப்பிடவும் வழியும் இன்றித்
தடம் இழந்த இரெயில்ப் பயணமிது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலுக்கு ஒரு கற்பனைத் தீவு

ஒரு அற்புதத் தீவு வேண்டும்

மனிதர்கள் யாரும் இல்லை
நாமிருவர் மட்டும்
நம்மையார் மனிதர் என்றது
நாங்கள் தெய்வப்பிறவிகள்

அந்த தீவு வானத்தில் பறக்கும்
உன்குளியல்கள் இராப்பொழுதில் நடக்கும்
வெண்ணிலவை மஞ்சள் எனத்தொட்டு
நீ மேனி தடவி
மேகம் ஒடுக்கி குளிப்பாய்

நான் நட்சத்திரப் பூப்பறித்து
வானவில்லில் நார் கிழித்து
கூந்தலுக்கு மாலை தினம் சூட்டுவேன்
நான் மட்டும் ஆடையாக நீ

நமக்கிடையே தென்றலும் நுழையாது
ஆனாலும் வியர்க்காது
என் நுரையீரல்த் தோட்டத்து
மூச்சுக்காற்றே
பசுந்தென்றலாகும்
உணவுகள் இல்லை முத்தங்கள்
மட்டும்தான் உணவு
பிள்ளைகள் வேண்டாம்

நியூட்டனின் ஈர்ப்புவிதிதாண்டி
நம் தீவு
ஐன்ஸ்டீன் சொன்னபடி
ஒளியின் வேகத்தில் மிதக்கும்
எம் காதலுடன் நாமும் இளமையாய் இருப்போம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழலை

மண்ணுக்குள் முத்தாக
முதிர்ந்து வந்த முத்தே
எண்ணத்தை யார் கலைத்தார்?
கன்னத்தில் யார் அடித்தார்?

பள்ளிச்சிட்டாக நீ பறந்தே
பட்டாம் பூச்சி தனைப்பிடித்து
துள்ளிக்குதித்து குலவுகின்றாய்
எள்ளி நகையாடும் ஒரு கூட்டம்
கிள்ளிவிட்டு தாலாட்டுப் பாடும்
முல்லைச்சிரிப்பின் அழகில்
கொள்ளைபோனது மனமே
கள்ளமில்லா உன் அழகைக்
கவர்ந்தே சென்றவர் பலரே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல்

மூன்றெழுத்து
முந்நூறு பிரச்சனை
விளக்கமுடியாத உண்மை
பருவக்காலத்துப் பன்னீர் மழை


சுகம் தரும் முட்படுக்கை
ஆசை விளையும் சோலை
மாறாத தலைவலி
உலகப்பொதுமொழி

நீடித்து வாழும் தொல்பொருள்
ஆதி அந்தமற்ற இறைவன்
முக்காலமும் அழியாதது
பலபேரை அழித்தது

விடைகாணமுடியாத புதிர்
அக்கினி ஆடை
பல்லிவிழுந்த பாற்சோறு
"துடக்கு"க் காலத்துத் திருவிழா

ஊமைகள் நடத்தும் பட்டிமன்றம்
புயல்நடுவே கொழுத்தப்படும் மெழுகுதிரி
பாலைவனத்தில் போர்த்திய கம்பளி
காற்றில் எழுதப்பட்ட கவிதை

மாவீரர்களும் மண்டியிட்ட இடம்
புத்திஜீவிகள் புதையுண்ட குழி
சிரிக்கும் போது வரும் அழுகை
"பொல்லாத HIV"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகிம்சை, நாங்கள்

அவர்கள் கையில் பீரங்கிகள்
இவன் கையில் கைத்தடி
அவர்கள் உடலில்க் கவசங்கள்
இவனுடலில்க் கதராடை
இவன் உப்பை அள்ளுகையில்
ஆவர்கள் வெடிமருந்து செய்தனர்
அவர்கள் போர் விமானங்களில்
இவன் மௌனமாகப் பாதையாத்திரையில்
அவர்களின் பொய்கள் நிறைந்த சட்டம்
அடியுண்ட போதும் இவனிடம் உண்மை
அவர்கள் பஞ்சு மெத்தையில்
இவன் பாவம் சிறைகளில்
அவர்களிடம் அதிகார வெறி
இவனிடம் அன்பு நெறி
வென்றது எது?
கொன்றது யார்?

மேலிருந்து வா
விடை காண.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது மாறாது


வரிசையில் அவள்,
கனவுகளும் தான்-அதில்
அவளின் குடிசைகள் கல்வீடாகின
அவள்,தெருவுக்கு மின்சாரம் வந்தது
நீர்க்குழாய்கள்,
நல்ல பள்ளிக்கூடம்,
வெள்ளம் நிக்காத வீதிகள்,
வசதியுள்ள கழிப்பறை,
சரியன அளவில் சங்கக்கடை மண்ணெண்ணை
புழு இல்லாத அரிசி
குழந்தைக்கு பால்மா
இத்தனையும் தெரிந்தது

கையில் மை பூசினார்கள்
அவளும் ஒரு சின்னத்தை
தெரிவு செய்தாள்
நிறைந்த மனசுடனா?
அது எனக்குத் தெரியாது.
ஆனால் நிரம்பிய கற்ப்பப்பையுடன்
அன்று அவள் கருவறையில்ச்
சுமந்த குழந்தை
அவள் கண்ட அதே கனவுகளுடன்
இன்று
வரிசையில் நிற்கிறது
சின்னம் தெரிவு செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய வீடுகள் எப்படி இருக்கவேண்டும்
என்று கற்பனை செய்தானோ
அதை எல்லாம் மற்றவர்களுக்குக்
கைவண்ணமாக்குகிறான்
குடிசையில் வாழும் கட்டிடத்தொழிளாளி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலி A/L Bio

என் அன்பிற்க்கும்,
ஆசைக்கும் உரிய
Medical Facltry போன்றவளே

என் பரவிப்போன சிந்தனைகள்
காதல் என்ற குவிவாடியில்
உன்மீது குவிக்கப்பட்டன.

பெண்கள் பொதுவாய் ஏழு கூட்டம்
கூட்டம் 1 காதலிக்கவைக்கும் பெண்கள்
2 காம இச்சைப் பெண்கள்
3 காசுப்பேய்கள்
4 ஆடவரை மதியாப் பெண்கள்
5 பயந்தே சாகும் பெண்கள்
6 தெய்வீகப் பெண்கள்
7 காதலே பிடியாப் பெண்கள்
அடி சர்ச்சைக்குரிய ஐதரசனே-நீ
கூட்டம் ஒன்றா? ஏழா?
உண்மையைச் சொல்லிவிடு.

நானும்
எத்தனை நாட்கள்
எவ்வளவு நேரம்-எத்தனை
எத்தனை மதில்களில்
"டார்வினின்" கூர்ப்புக் கொள்கையை
உறுதி செய்வது போல்க்
குந்தியிருப்பது,
உனக்காக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதவான் கேட்டார்
இருவரும் மனம் ஒத்துத்தான் பிரிகிறார்களா?
என்று
மனம் ஒத்துப்போனல்
ஏனய்யா விவாகரத்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்படியான இரவு

விளக்குகள் கண்மூடும்
விழிகள் விடியலைவெறுக்கும்
மேல் போர்த்த ஆடைகள்
மண்போர்க்கும்

அன்றைய தேடல்கள் இருளில்
இருவரும் விஞ்ஞானிகள்

பிரம்மனாகும் முயற்சி


முனகல்கள் கவிதையாகும்
கவிதைகள் முனகலாகும்

கட்டில் நிலவாகும்
கால்கள் சிறகாகும்

கற்பனைகள் ஓய்வெடுக்கும்
கவலைகள் தற்கொலை செய்யும்

மூச்சுக்காற்று காவியமாகும்
காத்திருந்த நாட்கள் முக்திபெறும்

அவளின் மூன்றெழுத்து பெயர் கழியும்
அவனின் இளமைத்தாகம் தணியும்
எத்தனை ஆயிரம் நாள்
இந்த கலைவிழா அரங்கேறினாலும்
பார்ப்பது
இருவரும்
மானம்கெட்ட தென்றலும் தான்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடை என்ற நாட்டியம்

உன் நடை என்ற
நாட்டியத்தைக் கண்டவுடன்
இந்திரன் சபைகலந்தாலோசித்தானாம்
இரம்பைக்கும், ஊர்வசிக்கும்
பிரியாவிடை கொடுக்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலை[3] (தலைக்கனம்)

அவருக்கு நினைப்பு
தன்னைவிட்டால் ஆள் இல்லை எண்டு
வயது முதிர்ந்த அளவுக்கு
மனுசனுக்குப் பாவம்
நல்லது கெட்டது தெரியேல்ல

படகோட்டியிடம்
பாரதம்பற்றிக் கேட்பார்
இறைச்சி விற்பவனிடம்
இராமாயணத்தில்க் கேட்பார்
கடையில் நிற்பவனிடம்
கந்தபுராண உரைவிளக்கம் கேட்பார்
திருடனைப்பிடிச்சால்த்
திருமந்திரத்தில் கேள்வி கேட்பார்

அந்தாள்ப் பெரிய அறிவாளிதான்
அதுக்காக
மற்றவனைப் பேயனாக்கலாமா?

ஒரு நாள் இப்படித்தான்
சிறுபயல் ஒருத்தன்
சிக்கிட்டான் - பாவம்
என்ன காலகஷ்டமோ
அவனுக்கெண்டு நான் நினைக்க
அவன் அந்தாளைப்பார்த்துக்
கேட்டான் ஒரு கேள்வி
"ஒசாமா பின்லேடனுக்கு
தும்மல் வந்தால்
ஒன்று செய்வாராம்
அது என்ன?" என்று

பாவம் அந்தாள்
முழித்தார், முக்காடுபோட்டார்
துவண்டார், திண்டாடினார்
"விடை தெரியவில்லை"
மண்டி இட்டார்.



சிறுவன் சொன்னான்
"தும்முவார்" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HIV

விபச்சாரத்தை ஒழிக்கக் கடவுள்
அமைத்த விசேட அதிரடிப்படை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைகொடுக்க மாட்டீரோ?

அறியாமையில் விழிகள் மூடி
ஹோர்மோனின் சேட்டைகளாலே
வைரசின் வேட்டைக்கு
பலியானோம் எங்களில் சிலபேர்

ஒரு ரூபாய் இலாபம் பார்க்கப்
பாவி அந்தச் சலூன் காரன்
ஒத்த "பிளேற்றால்" ஒன்பது பேருக்கு
வெட்டி வழித்த கொடுமையினாலே
தொற்றிவிட்டான் காலன் உடலில்த்
துவண்டுவிட்டோம் எங்களில்ச் சிலபேர்

சிலபேர் நாங்கள் குழந்தைகள் - பாவம்
என்ன தவறு செய்தோம் இறைவா?
தாயின் கருவறையில்
தொற்றியது கோரம்

வைத்தியரின் கவனயீனம்
பரிசோதிக்காத இரத்ததானம்
பரவியது நாளும் தோறும்
பாவி அந்தக் கொடியநோய்

தோழர்களே வெறுப்பதேன்
ஒதுக்கிப் புறம் தள்ளிவைப்பதேன்.
நாங்கள் அறியாமையில்க்
குழியில் விழுந்தோர்
அக்கறையீனத்தால்த் தகுதி இழந்தோர்
சாகும் நாளை எண்ணிக் கணக்கிட்டு
அழுவோர்
வாழும் நாள்
வசந்தமாக்கக் கை கொடுக்க மாட்டீரோ?
தோழர்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் தான் அவன்

கோவிலுக்கு போனேன்
அழகான ஜீன்ஸ்-சேர்ட்டும்
நெற்றியில் ஒற்றைக் குறியுமாய்

வசலில் அவன் தென்பட்டான்
அப்படி ஒரு நாற்றம்
மழைத்தூறலிலும் உடல் கழுவாதவன்
உயிரியல் மாணவர்களுக்கு உதவக்கூடிய
நடமாடும் வன்கூட்டுத்தொகுதி
பசிய நிறம் பார்க்க ஆசையா?
அவன் பல்லை எட்ட நிண்டு பாருங்கள்

அவன் கையேந்தி நிற்பதைப்பார்க்க
எனக்கு பல நாடுகளின் ஞாபகம் வருகிறது

சடைவளர்த்த சாமியர் இவன்
ஆனால் ஒருசின்னவித்தியாசம் தான்
நம்மூர் சாமிமாருக்கு வெளியே தூய்மை உள்ளே
அழுக்கு
இவனுக்கு உள்ளேதூய்மை வெளியே அழுக்கு


என்னையும் அவனையும் ஒப்பிட்டேன்
என்மினுக்கம் - அவனின் அழுக்கு
என் உடல்வாசம் - அவனின் நாற்றம்
என் கனமான பை — அவனின் வெறும் பை

ஆங்......... நாங்கள் இவனைத்திரும்பியே
பார்க்கக்கூடாது
இவன் எல்லாம் ஏன்தான் வாழுறானோ?
என்று நினைக்க
சட்டென்று ஏதோ மாற்றம்.
என்னுள் ஒரு அமைதி
நாங்கள் ஒருநொடி அவனாய் மாறினோம்
"அவன் நெற்றியில் நிறைந்திருந்தது விபூதி"
என் ஒற்றைக்குறி
அவனிடம் கைகள் ஏந்தியது கலாசாரத்துக்காய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமாவாசை

கேடுகெட்ட பெண்ணே
வெண்ணிலா!
வானை ஏனடி விவாகரத்து செய்தாய்?
பார் உன் வானக்காதலனின்
இருள் சூழ்ந்த முகத்தை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூடல்ப் பொழுது

கட்டில் களமாக இது இருவர் நடத்தும் யுத்தம்
முத்தம் தவிர வேறு ஆயுதம் இல்லை
வித்தியாசமான போர்
உயிர்களுக்கு அழிவில்லை
இது ஓர் "உயிராக்கல் முயற்சி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கிய உறவுகளுக்காய், இப்படிக்குத் தமிழன்.

அவளின் ஆடைகளைக் களையவில்லை
அவளைக் கற்பழிக்கவில்லை
ஆனாலும் அவள் நிர்வாணமாக்கப்பட்டாள்
உரிமைகளைப் பறித்தபோது

நூறுபேர் சுற்றிநின்று பார்த்துக்
கைதட்டினார்கள்
அவளின் துன்பம் என்ன தெருக்கூத்தா?
அவளின் அலறலைக் கோடிப்பேர் இரசித்தீர்கள்
ஈராக்கிய தேசிய கீதம் முகாரி ஆனது

சதாமின் மரணத்துக்குப் பின்
சதா எத்தனை மரணம்?
பள்ளி வாசல்களுக்குச் செந்நிறப்பூச்சா?
உங்களை யார் கேட்டார்?
குர்ஆனின் பக்கங்களைக்கிழித்துக்
கப்பல் விட நினைக்கும் கயவர்களே!
தாடிகள் நிறைந்த பயங்கரமான தர்பார்கள்
உருவாகவில்லை
உருவாக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறது
அதிகார வெறி
அத்துமீறியதால்

உலக சமாதான அமைப்பகளே
நீங்கள் ஈராக்கின் மீது
பறக்கவிட்ட வெள்ளைப்புறாக்களின்
மடியிலுமா வெடிகுண்டு?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூறையாடின

நான் கடற்கரைகளில்
உனக்காய் அமைத்த தாஜ்மகால்களை
அலைகள் சூறையாடின
காலங்கள் நம் காதலை
எப்படிச் சூறையாடியதோ
அப்படியே.....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாராவது இருக்கிறீங்களா?

கோயில்கள் சேலையை இழந்தபோது
நெற்றிகள் திலகத்தை மறுத்தபோது
T-Shirt இங்கு நுழைந்தபோது
மறைந்தது மார்பல்ல பண்பாடு
தெரிந்தது கவர்ச்சியல்ல ஓர் இனத்தின் அழிவு

முழங்கலில் வெய்யில் பட்டபோது
மலையகம் தட்டிய கூந்தல்
சமவெளியோடு போதும் என்று நீங்கள் - வெட்டியபோது
பூக்களின் வாசம் மறந்தபோது
பின்னலை நீங்கள் குலைத்தபோது
கலைந்தது உங்கள் முடியல்ல – கலாசரம்
தெரிந்தது அழகல்ல – அந்நியமோகம்

Cell-Phone இல்ச் சேட்டைகள்
தங்குமிடங்களில் தாசியர் சேவை
நடைபாதையில் மலிவுவிலைகளில் "AIDS"

கற்பால் மதுரை எரித்த காலம்போய்க்
கற்பையே எரிக்கும் கலியுக காலம் இதில்ப்
பகல்வேளைகளிலும்
1000W light ஐப்பிடித்துத்
தேடுகிறேன் பெண்களை........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுள்

அண்டவெளியில்
கிரகங்களை அள்ளிவீசிப்
பல்லாங்குழிஆடும் குழந்தை

உலகம் என்ற சினிமாவில்
திரைக்கதை
இயக்கம்

மனிதக்குழந்தைகளை
மண்ணில் ஈன்றுவிட்டு
முகம் காட்ட மறுக்கும் பாசம் இல்லாத்தாய்

சூரிய சந்திரரை விளக்கென பிடித்து
மண்ணில் இல்லாத ஒன்றை (மனிதத்தை)
பலயுகங்களாய் தேடியலையும்
விசித்திரமான விஞ்ஞானி

பூதங்களை அடக்கியாளும்
மந்திரவாதி

அன்பென்ற
இலஞ்சத்துக்கு அடிபணியும்
அரச அதிகாரி

$C^{14}$ சோதனைக்கும் காலம்காட்டாத
தொல்பொருள்

சிலருக்கு தியாகி
சிலருக்கு துரோகி

அகதிகளின் அழுகுரல் கேட்க்காத
அண்டைநாடு

நம்பியவரைக் காப்பாற்றவில்லை
சரி அதைவிடுவோம்
தன்கோவில்களைக் கூட காப்பாற்ற மறந்த
தன்னலத்துரோகி

சில காவி உடுப்புக்கள்
வயிற்றுப்பிழைப்புக்காய்ச் சொல்லும்
கதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை

பூமிப் பெண்ணின் அவமானக் குளியல்
மானங்கெட்ட வானம்
அள்ளித்தெளிக்குது அமுதை
அதில் இவள் உடல் நனைய
படம் எடுப்பதற்க்குப் பெயர் மின்னலாம்


ஏய் மேகக்கூட்டமே
இங்கென்ன பட்டிமன்றமா? நடக்கிறது
முழக்கம் என்ற பெயரில் நீ கைதட்ட




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் என்றால் என்னம்மா?

அம்மாவிடம் கேட்டேன்
அம்மா சொன்னா பசியோட இருக்கிறாய்
சாப்பிடடா என்று,
இரண்டு இடியப்பம் தந்தா
எனக்கு விளங்கிவிட்டது
"அரசியல் என்றால் என்ன" என்று
உங்களுக்கு?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகன் வயசுக்கு வந்திட்டானா?


அப்பனுக்கு,
நித்திரை தொலையும்
படுக்கை பாடையாகும்
தலையணை தண்டவாளம் ஆகும்
சிரிப்பால் கண்ணீர் வரும்
சிந்தித்தால் சிறகொடியும்
உணவிருக்கும் பசிக்காது
தெருவில் இறங்க உள்ளம் பதைக்கும்
பாடசாலை பதிவுகளில் கையொப்பம் போலியாகும்

அவன் காதலுக்கு நீ வில்லனாவய்
உன்னை கண்டு அவன் ஒதுங்குவான்
அவனைக் கண்டாலே நீ ஒழிவாய்

உனக்கு பதினாறின் நினைவுகள் மீண்டும் வரும்
உன் சில்மிசங்கள் மீளப்போகின்றன
அவனின் வடிவில் என்று
உன் DNA யை நீ வெறுப்பாய்

உன் தந்தையின் வேதனைகளைப் புரிந்து கொள்வாய்
உன் தந்தை உனக்குத் தெய்வமாவான்
தாடி வளர்க்காமல் ஞானியாவாய்

சந்தோசப்படுவாய்
உன் மகன் நாளை தந்தையாகினால்
நீ அவனுக்கு தெய்வமாவாய் என்று




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நக்சலைட்டின் நியாயம்

என் தாயின் முந்தானையை இழுத்தபோது
நான் முக்காடு போடவா?
முரண்படவா?

என் தமக்கையின் உடல் பற்றைக்குள்
சிதையுண்டு கிடக்கயில்
காகம் கொத்திக் கிழித்த கோரத்தை பார்த்துக்
கவிதை எழுதவா?
கத்தி தூக்கவா?

என் வீட்டுக் கிணற்றில்
அவன் வந்து சலம் கழிக்க
அதை தீர்த்தம் என்று ஏற்க்கவா?
பழி தீர்க்கவா?

காஸ்மீரின் எல்லையில்க் குளிர்காய்கிறோம்
நீங்கள் எங்கள் குடிசைகளை எரித்த வெப்பத்தில்.
உங்களைக் கொல்லும் கிருமிகள்
நாங்கள் இல்லைத் தோழர்களே
உங்களுக்குள் இருக்கும் ஒட்டுண்ணிகள் தான்
களை எடுக்கக் களம் வேண்டாமா?

மதங்கள் பிடித்துப்போவது நியாயம்
மதங்களால் மதம்பிடித்துப்போனால்........
வெறிக்கு பலியாவது உயிர்களல்ல
மனிதமும் மனிதநேயமும்தான்.

இரு காதொடு கண்கள்
ஒரு மூக்கொடு, வாய், இதயம், மனம் உள்ள
உங்களைப்போன்ற மனிதர்கள்தான் நாமும்
ஆனால்ப் போராடத்தெரியாதவன் வெட்டி வைத்த
அகிம்சை என்ற பதுங்குகுழிக்குள்
இனியும் புதைய நாம் தயாரில்லை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீர்ப்பு

நேற்று அந்திமாலை
உன் தோள் விட்டு நழுவி
உன் மாரழகு என்ற ஆயுதத்தால்த்
தென்றலைக் கொன்ற குற்றத்திற்க்காக
என் காதல்நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பின் படி
உன் துப்பட்டாவிற்க்கு அலுமாரியினுள்
ஆயுள் தண்டனை விதிக்கிறேன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்ததால் புரிந்தேன்

உன்னை சந்தித்தேன் எனக்காய் சிந்தித்தவன் நீ
பொண்ணு நீதான் என்றாய் கண்ணையே இழந்துவிட்டேன்
பாதிவிழி மூடுகையில் கோதி முடிதடவுகிறாய்
நூறுமுறை என்பெயரை ஆறுதலாய்ச் சொல்கின்றாய்
மாறாது என்னினைவில் மயங்கியே நீ விழுந்தாய்

சோதனையில்த் தோற்றுவிட்டேன்
வேதனையில் வெற்றி பெற்றேன்
போதனையை கேட்டபின்பு
சாதனைதான் புரிந்துவிட்டேன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நாம் ஏன் இழிபிறப்பு?

ஆடிக் களிக்கின்ற வேளையிலே
உள்ளம் வாடி களைத்திட்ட நம் நிலையை
பாடவும் வார்த்தையில்லை
மானுடராதலின் சோகமதை

தேனீக்கள் கூட்டமாய்க் கூடிடுதே
நல்ல மதுவினை உண்டு களித்திடுமே
மனிதர்கள் நாங்கள் கூடிவிட்டால்
நாட்டில் மதச்சண்டை இனச்சண்டை
நடத்துகின்றோம்
கல்லுக்குள் தேரையும் வாழ்ந்திடுதே
இதை உள்ளுக்குள் நீ கொஞ்சம் உணர்ந்து விடு

எறும்புக்கு ஆசான் யாரிருந்தார்?
அதன் ஒழுங்குக்கு உலகில் ஈடில்லை
வரமுன் காக்கும் நல்லறிவை
வகுத்தவன் இறைவன்-மறந்துவிட்டாய்

ஓரிரு சோற்றைக் கண்டாலும்
உறவைத்தேடி அழைக்குது காக்காய்
மனிதனில் யானும் கண்டதில்லை
காக்கை குலத்தின் நற்குணத்தை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்ன செய்யலாம்?

எனது காதலியின் தங்கை
வயதுக்கு வந்து நேற்றோடு
ஒருவருடம் முடிந்தது

எனக்கு முன்னப்பின்னப் பழக்கம் இல்லை
இப்படி வேலை செஞ்சு.
மோட்டார் வண்டியில் அங்கபோனன்
1000 ரூபா தாளை நீட்டினன்
வந்துமோட்டார் வண்டியில் ஏறினாள்
உணர்ச்சிகள் பெருகியது புரட்சிக்கு,
கொள்ளை அழகு,
இவள் இழிபிறப்பாய்த் தெரியவில்லை
பற்றற்று இருக்கிறாள்
என் காதலியின் தங்கையின்வயதுதான் இருக்கும்
வெறும் ஈரெட்டு தான்

கிளம்பியது வண்டி
போற வழியில்க் கதைகொடுத்தேன்
அவள் கதையில் காமம்பலி.

உலகநாடுகள் வேடிக்கை பார்த்த
வேட்டைக்களத்தில் தப்பியவெள்ளாடு அது.
தகப்பனுக்கு இருகால்களும் இல்லையாம்.
தமயன்மார் காலன் வீட்டின் விருந்தாளிகளாம்.
இவளுக்குக்கீழே இரண்டுதங்கையராம்,
கைகள் இழந்த விதவை தமக்கைக்குக்
கைவிட்டெண்ண 4 குழந்தைகளாம்,
உண்ணவும்,உடுக்கவும்,கல்விக்கும்
காசுவேணும் எண்டு
தாயும் தானும் சகதியில்க்குளிக்கமுடிவு
செய்துவிட்டோம் என்றாள்

தொழிலுக்குப்புதுசு என்று தெரிகிறது
அவள் கண்கள் பயம்என்ற பசுபிக்கில்
"டைட்டானிக்காய்" மூழ்குவதைப்பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதுபிரச்சனை என்னவென்றால்?
இவளை என் இளமைவெறிக்குப்பலியாக்கவா?
பணம்நிறையக்கொடுத்து பாதிவழியில் இறக்கிவிடவா?
இல்லை,
என் இனம்காக்க
இவளைக்கரம்பிடிக்கவா?



L. 12828.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Teenage love

National ICவந்திராது,
Family card க்கு ஆசைவரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமலியத் தாய்

வெளியில் இவ்வளவு காற்றிருக்க
ஏனடா மகனே
என் முலையில் வாய்வைத்துக்
காற்றைக் குடிக்கிறாய்.
ஏனடா அழுகிறாய்

சத்தியமாய்த் தெரியாது எனக்கும்
தாய்ப்பாலின் சுவை என்னவென்று
ஏன் என்றால்
உன் பாட்டியின் முலைகளுடன்
பாலுக்காகப் போராடித்
தோற்றுப் போனவள் நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிஞரைப் பற்றி.......

உமா யார் இவன்? ஒரு புலவனைப் புதல்வனாய்ப் பெற்றதற்கு
இவன் பெற்றோர் கொடுத்து வைத்திருக்க வேண்டும் .
இவன் பெயர் சொல்லி பெருமைப்பட்டுக்கொள்கிறாள் கல்லூரி அன்னை.
இவன் காதலி கொடுத்துவைத்தவள், கவிதை செய்யும் இயந்திரமே
அவளிற்கு காதலனாக கிடைத்திருப்பதனால்...
இவன் கொஞ்சம் அவசரக்காரன் ஆனால் அதிசயக்காரன், இவன்
கவிகள் பார்த்து அதிசயத்திருக்கிறேன், ஆச்சரியப்பட்டிருக்கின்றேன்,
எப்படி இவனால் இப்படி எழுதமுடிகின்றது என்று...
இவன் உடல் சொல்கிறது இவனுக்கு வயது 18 என்று இவன் கவிதைகள்
சொல்கிறன இவனுக்கு வயது 80 என்று.
இவன் தமிழோடு உறவாடிப் பிறந்தவைதான் இவனது கவிதைகளோ!
கவிதைகளால்க் காதலிக்கிறான், அரசியல் செய்கிறான், புரட்சி
செய்கிறான், தீவிரவாதம் செய்கிறான், வாழ்வியல் சொல்கிறான்
இவனைக்கவிஞன் என்பதா? இல்லை....
இவன் கவிதைகளுக்கு உயிர் இருக்கின்றதே இவனும் பிரம்மனோ...
உன் ஒரு கவிதையே போதும் ஊரிற்கு உன் திறமை சொல்ல
100 கவிதைகள் செய்திருக்கிறாய், உலகமே உன்னைத் திரும்பிப் பார்க்கும்

அன்பும் நினைவுகளுடனும்
ரெ.துவாரகன்.
ஊடகச்செயலாளர்
UR Friend Foundation

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org